**THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT**

**CHENGALPATTU**

**SC No. 102/2024** **Dt** 04.06.2025

**PW.4 பெயர். திரு. செல்வதுரை த|பெ. வெள்ளியான்**

## எதிரித்தரப்பில் குறுக்கு விசாரணைத் தொடர்ச்சி-

புகார்தாரர்(அ.சா.1) எனக்குச் சொந்த தம்பி என்றால் சரிதான். அ.சா.1 எனக்கு தம்பி, நான் அவருக்கு அண்ணன். நான் எந்த வேலை செய்து வருகிறேன் என்றால் விவசாய வேலை செய்து வருகிறேன். வயலூா் பேருந்து நிலையத்திற்கு நான் எதற்காக சென்றேன் என்றால் நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த பன்னீரும் டீ.குடிப்பதற்காக சென்று டீ-குடித்த பின் வந்து பேருந்து நிலையத்தில் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது எந்தவாகனத்தில் சென்றோம் என்றால் தனித்தனியாக நானும், பன்னீரும் இருச்சக்கர வாகனத்தில் சென்றோம். அந்த பேருந்து நிலையத்தில் எத்தனை பொதுமக்கள் இருந்தனர் என்றால் நாங்கள் இருவா் மட்டும் தான் இருந்தோம். எத்தனை போலிசார் வந்தனர் என்றால் ஒரு எஸ்.ஐ யும் இரண்டு போலிசாரும் ஆகமொத்தம் 3 பேர் வந்தனர். அவர்களில் சீருடையில் இருந்தவர்கள் எத்தனை பேர், சீருடையில் வராதவர்கள் எத்தனை பேர் என்றால் அனைவருமே சீருடையில் தான் இருந்தனர். போலிசார் எந்த வாகனத்தில் வந்தார்கள் என்றால் இருசக்கர வாகனத்தில் தான் வந்தார்கள். என்னிடம் எதுவும் கையொப்பம் வாங்கினார்களா என்றால் ஆமாம். நான் எத்தனை கையொப்பம் போட்டேன் என்றால் பேருந்து நிலையத்தில் வைத்து ஒரு கையெழுத்தும், வசீகரன் வீட்டில் வைத்து ஒரு கையெழுத்தும், ஆக இருகையெழுத்து போட்டேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து நான் கையால் எழுதியிருந்தேனா அல்லது டைப்செய்யப்பட்டதா என்றால் நான் என் கையால் அங்கேயே எழுதினேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் என்ன எழுப்பட்டிருந்தது என்று எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல. எனக்குத் தெரியும். ஒப்புதல் வாக்குமூலத்திலும், மகசரிலும், அ.த.சா.ஆ.1(புகாரிலும்) எனது கையொப்பங்கள் வித்தியாசப்படுகிறன்றன. எனது கையில் உதறல் ஏற்ப்பட்டதால் அவ்வாறு வெவ்வேறான கையொப்பங்கள் காணப்படுகின்றன. எதிரியின் வீட்டில் கைப்பற்றியதாக சொல்லப்படும் பைப் என்ன வகையான பைப் பிளாஸ்டிக் வகையான பைப்பா என்றால் இல்லை. 2 அடி

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNCG060025382024-orderno-6.pdf

www.ecourtsindia.com

அளவிலான முக்கால் இரும்பு பைப் தான். நான் பேருந்து நிலையத்திற்கு செல்லவே இல்லை என்றும் எதிரிகளின் வீட்டில் கைப்பற்றபட்டதாக சொல்லப்படும் பைப்பை எதிரிகள் வீட்டில் கைப்பற்றபடவில்லை என்றும் வழக்கிற்காக எங்கையோ வைத்து கைப்பற்றப்பட்ட பைப்பை எதிரிகள் வீட்டில் கைப்பற்றப்ட்டதாக எதிரிகள் மீது இருந்த முன் விரோதத்தை அடிப்படையாக கொண்டு எதிரிகளுக்கு எதிராக பொய்யாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அசா.1 ன் அண்ணன் என்பதால் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, சாட்சி சொல்ல என்னால் தட்டச்சருக்கு சாட்சி கூறியவாறே சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சி படித்துப் பார்த்து சரி என்று ஒப்புக்கொண்டு 04.06.2025 _அன்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்,

Witness Sd/-XXXX

Sd/-Tmt.T.JayashreeM.L.,
தலைமை குற்றவியல் நடுவர்,
**செங்கல்பட்டு.**

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNCG060025382024-orderno-6.pdf

www.ecourtsindia.com